செய்தி வெளியீடு எண்.127 நாள்.01.03.2017

**திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் வடமதுரை கிராமத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் தடுப்பூசிகளை வழங்கி துவக்கி வைத்தார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் வடமதுரை கிராமத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் இன்று (01.03.2017) தடுப்பூசிகளை வழங்கி துவக்கி வைத்து கூறியதாவது.

கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயினால் பசு, எருமை, எருதுகள், பொருளாதார இழப்பு, இறப்பு உள்ளடக்க வல்லது. கால்நடைகளை காப்பதற்காக வருடத்திற்கு இரண்டு முறை தடுப்பூசி முகாம் பணிகள் கால்நடை பராமரிப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் மார்ச் 1 முதல் 21 தேதி வரை அனைத்து கிராமங்களிலும் பசு, எருமை, எருதுகளுக்கு 12 வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது.

வடமதுரை கிராமத்தில் உள்ள 1800 கால்நடைகளுக்கு இன்று முதல் 5 நாட்களுக்கு தடுப்பூசி பணி நடைபெறும், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 2,81,000 கால்நடைகளுக்கு மார்ச் 1 முதல் 21 தேதிகளுக்குள் அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட உள்ளது. மாவட்டத்திலுள்ள 10 கிராமங்களில் தடுப்பூசி மேற்கொள்ளும் பணிக்கு முன்பும், தடுப்பூசி முடித்த 21 நாட்களுக்கு பின்பு இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு தடுப்பூசி வாரியம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி அளவும் அறியப்படும். தடுப்பூசி குளிர்நிலையில் இருக்கும் பொருட்டு திருவள்ளூர் மாவட்ட தலைமை இடத்தில் 24 மணிநேர குளிர்பதன அறை (Walk in Cooler) மற்றும் 12 இடங்களிலும் மின் தடை ஏற்பட்டாலும் குளிர்பதனம் தொடரும் வகையில் சிறப்பான வடிவமைக்கப்பட்ட குளிர்பதன பெட்டிகள் (1LR) மூலம் தடுப்பூசி பாதுகாக்கப்பட்டு தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.கே.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) மரு.இராமமூர்த்தி, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்யஸ்ரீ, உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) மரு.ஸ்ரீதர் பாபு, நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் மரு.டி.கோபு கால்நடை மருத்துவர்கள் கால்நடை ஆய்வாளர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~